**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 99/2023

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள் புதன் கிழமை PW1ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.03.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | பாமா (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 25.10.1989- என் தந்தை பெயரில் உள்ள கிரய சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும்
2) 11.02.2011- என் தந்தை 2 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில் மெண்ட் சார்பதிவக நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3) 11.02.2011- லெட்சுமணணன் மகேந்திரனுக்கு எழுதி வைத்த செட்டில் மெண்ட் சார்பதிவக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) 06.02.1976- சீதா பெயரில் உள்ள கிரய சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.4 ஆகவும்
5) 07.08.2015- சீதா இறப்பு சான்று வா.சா.ஆ. 5 ஆகவும் ( கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணம் என்பதால் சாட்சியமாக ஏற்புடையது அல்ல என் 2 - ம் பிரதிவாதி ஆட்சேபணையுடன் குறியீடுசெய்யப்படுகிறது)
6) 28.10.2022- வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 6 ஆகவும்
7) 02.11.2022 -1 பிரதிவாதியின் அஞ்சலை ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 7 ஆகவும்
8) 02.11.2022 -2 பிரதிவாதியின் அஞ்சலை ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 8 ஆகவும்
9) 02.11.2022 -3 ம் பிரதிவாதியின் அஞ்சலை ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 9 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**